கும்பகோணம் விவசாய சங்கத்தின் மாதாந்திரப் பத்திரிகை.

வாலியம் 12] 1918-ஞூ பிப்ரவரிமீ [நெ. 2.

MONTHLY JOURNAL OF 8 PAGES.

EDITED BY

Mr. R. Srinivasa Iyengar B. A. and Mr. A. Subramania Iyer, B. A.

Annual Subscription is One Rupee. Post Free.

இரண்டு பரிசுகள் கொடுக்கப்படும்.

சென்ற 1—2—18ல் நடந்த நமது சங்கத்தின் நிர்வாக கமிட்டியின் மீட்டிங்கில், இந்த மாதம் 20வ முதல் 14–நாளைக்கு நீலத்தநல்லூரில் நடக்கிற கால்நடைச்சந்தையில் இந்தஜில்லாவில் வளர்க்கப்பட்ட முதல்தரமான காளைமாடு கொண்டுவருகிறவருக்கு ரூ. 15ம், முதல்தரமான பசு கொண்டுவருகிறவருக்கு ரூ. 10ம், பரிசு அளிப்பதாய் தீர்மானிக்கப்பட்டிருக்கிறதை சங்கத்தின் மெம்பர்களுக்கு தெரிவிக்கிறோம்.

"கம்பெனி பருத்தியும் புளிச்சைப், பருத்தியும்.

கம்பெனி' பருத்தி என்பது என்ன?

புளிச்சைப் பருத்தி என்பது என்ன?

திருநெல்வேலி, இராமனுதபுரம் ஜில்லாக்களிலுள்ள ஒவ்வொரு ஸம்ஸாரிக்கும் இந்த மேலேசொன்ன பருத்திகளைப்பற்றி இப்பொழுது நன்றாய் தெரிந்திருந்தபோதிலும் சென்ற மூன்று நான்கு வருஷங்களுக்கு முன்பு அவர்களுக்குக்கூட இந்தப் பெயர்கள் சுத்தமாய்த் தெரியாது.

இப்படியிருக்க இந்தப்பருத்திகளைப்பற்றி என் இவ்விதமான ஆடம்பரங்கள் செய்யவேண்டும்?

சங்கதி என்னவென்றால் சென்ற அநேக வருஷங்களாக திருநெல்வேலிப் பிராந்தியங்களில் பருத்திப்பயிர் சாகுபடி செய்வதைபற்றி விவசாய இலாகாதார் மிகவும் ஜாக்கிரதையாய் பரிசீலனை செய்துவந்திருக்கிறார்கள்.

அதனால் பின் குறிப்பிடடிருக்கிற விஷயங்களை அறிந்திருக்கிறார்கள்:—

(1) இந்தியாவிலிருந்து அயல் தேசங்களுக்கு ஏற்றுமதியாகிற பருத்தி தினுசுகளில் முதல்தரமானவைகளில் திருநெல்வேலி பருத்தி ஒன்று.

(2) அது சிலாக்கியமானவைகளில் ஒன்றென்றாலும் பின்னும் அதிகமான சீர்பாடுகள் செய்ய லாயக்காய் இருக்கிறது.

(3) இந்தப் பிராந்தியங்களில் இப்பால் கொஞ்சகாலமாய் புளிச்சை, அல்லது ஜாரி என்று சொல்லப்பட்ட ஒரு மட்டமான தினுசு பருத்தி மென்மேலும் பயிரிட்டு வரப்பட்டிருக்கிறது.

(4) இந்த உலகத்திலுள்ள பருத்தி வியாபார ஸ்தலங்களில் இந்தத் திருநெல்வேலிப் பருத்திக்கிருக்கிற நல்ல பெயரைக் கெடுத்துப் போடக்கூடிய இந்த புளிச்சைப் பருத்தியைப் பயிரிடவே கூடாது என்று சம்சாரிகளுக்கு வற்புறுத்துவது அவசியமாகிறது.

(5) புளிச்சைப் பருத்தியை சாகுபடி செய்வதைக் குறைத்து நிறுத்திவிடத் தகுந்த உபாயமாவது ஸம்ஸாரி தன் பூமிகளில் இதுவரை பயிரிட்டுவந்த பருத்திகளைவிட அவனுக்கு ஜாஸ்தி லாபத்தைத் தரக்கூடிய சிலாக்கியமான ஒரு தினுசு பருத்தியைக் கொடுப்பதுதான்.

இப்பொழுது திருநெல்வேலிப் பிராந்தியத்தில் வடகிழக்குப் பருவக்காற்று மழைகளின் உதவியால் நீர்ப்பாய்ச்சல் அன்னியில் கரிசல் காடுகளில் சாதாரணமாய் இரண்டு முக்கியமான தினுசு பருத்திகள் பயிரிடப்பட்டு வருகின்றன. இந்தப் பருத்திகளாவது உப்பம், கருங்கண்ணி என்பன.

உப்பம் பருத்தி மிகவும் வெண்மையாய் இருந்தபோதிலும் சற்றே மிருதுவற்ற இழைகளையுடையதாய் இருப்பதுடன் சமுத்திரக் கரையினின்றும் வெகுதூரத்திற்கப்பால் விளைவிக்கப்படுகின்றது.

கருங்கண்ணிப் பருத்தியோ அவ்வளவு வெண்மையானதல்ல என்றாலும் அதன் இழைகள் மிருதுவாயும் நீளமாயும் உறுப்பாயும் இருக்கின்றன. மற்றும் இப்பருத்தி கடற்காற்று ஜாஸ்தியாய் வீசப்பட்ட இடங்களில் நன்றாய் விளைகிறது.

இந்தத் திருநெல்வேலிப் பருத்திக்கு ஏற்பட்டிருக்கிற சிலாக்கியமானது இந்தக் கருங்கண்ணிப் பருத்தியின்மேல்தான். உப்பம் பருத்தியானது முதலில் கோயமுத்தூர் ஜில்லாவிலிருந்து வந்தது இரண்டுபேர் ஒவ்வொரு தாயிலும் ஒருவரைப்போல் மற்றவர் ருக்கிறதில்லை யென்பது பொதுப்படையாய்த் தெரிந்தபோதிலும் ஒரு சிறு குழந்தைக்கு ஒருவருக்கும் மற்றவருக்கும் உள்ள வித்தியாசம் தெரிகிறதில்லை. இதுபோலவே சிக்ஷையில்லாதவர்களுக்கும் தெரியாதவர்களுக்கும் எல்லாக் கருங்கண்ணிப் பருத்திச் செடிகளும் ஒரேமாதிரியான குண விசேஷங்களை யுடையனவாய்த் தோன்றும். ஒவ்வொரு விஷயத்திலும் ஒரேமாதிரியாய் இருந்த இரண்டு செடிகள் எப்பொழுதும் இருந்ததில்லை. பொதுப்படை

யாய்ப் பேசுங்கால் செடிகள் பெரும்பாலும் அவற்றின் தாய்ச் செடிகளைப்போல் இருக்கின்றனவேஒழிய வேறு செடிக்களைப் போல் இருப்பதில்லை இவ்விஷயங்களை மேற்கொண்டு சென்ற 8 வருஷகாலமாக இழை நீளமாயும், வெண்மையாயும், நேர்த்தி யாயும், பட்டுப்போல் மிருதுவாயும் உறப்பாயும் அடர்ந்தும் இருக்கக்கூடிய பருத்தியுடைய தனிப்பருத்திச் செடிகளைக் கண்டு பிடிக்கும் பொருட்டு கருங்கண்ணிப் பருத்திக் காடுகள் ஒரே தொடர்ச்சியாய்த் தேடி வரப்பட்டன.

இம்மேற்சொன்ன குணங்கள் அமைந்த செடிகள் கடைசி யாகக் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. தெரிந்தெடுக்கப்பட்ட செடியிலிருந்து கிடைக்கிற பருத்தி பூராவும் ஜாக்கிரதையாய்ச் சேகரிக்கப்பட்டு அதனின்றும் கிடைக்கிற விதையெல்லாம் அடுத்த வருஷம் விதைக்கப்படுகிறது. இம்மாதிரியாய் பருத்தி முழுவதும் பாதுகாக்கப்பட்டு விதையவ்வளவும் விதைக்கப்படுகிற இம்முறை 7, 8 வருஷங்களுக்கு இம்மாதிரியாகவே செய்துவரப்படுகிறது. இப்பொழுது முதலில் தேடி எடுக்கப்பட்ட ஒரு செடியிலிருந்து கிடைக்கப்பெற்ற விதையிலிருந்து தொடர்ந்து விதைத்துண்டாகிய விதையானது ஆயிரக்கணக்கான ஏகரா பூமியில் விதைக்க ஏராள மான விதையைக்கொடுக்கிறது. இம்மாதிரியான வேலை கோவில் பட்டி விவசாயப்பண்ணையில் செய்துவரப்பட்டது. இப்படி உண் டாக்கிய பருத்தியே இப்பொழுது கம்பெனி பருத்தி என்று சொல் லப்படுகிறது.

சென்ற வருஷத்தில் அநேக சம்சாரிகள் இந்தக் கம்பெனிப் பருத்தி சாகுபடியால் காட்டுப்பருத்திக்குச் சாதாரணமாய்க் கிடைக்கக்கூடிய லாபத்தின்மேல் ஏகரா ஒன்றுக்கு 12 ரூபாய் வீதம் ஜாஸ்தி லாபம் அடைந்தார்கள். விவசாய இலாகாவின் முக் கிய நோக்கமாவது சம்சாரியின் நிலைமையை விர்த்தி செய்வது தான்.

எகிப்து தேசத்தில் ஒரு ஏகராவிலிருந்து 400 ராத்தல் பஞ்சு கிடைக்கப்படுகிறது இந்தியாவில் சராசரி 80 ராத்தலுக்குமேல் போவதில்லை. திருநெல்வேலி கரிசல்களில் நாம் ஒருபொழுதும் 400 ராத்தல் பஞ்சு விளைவிக்கப்போவதில்லையென்றாலும் ஜாஸ்தி யான விர்த்திக்கு வழியிருக்கிறது. மற்றும் ஸம்ஸாரியானவன் தன் கடன்களைக் கொடுத்துவிடக்கூடிய வழியையும் விவசாய இலாகா இப்பொழுது அந்த சம்சாரிகளுக்கு எடுத்துக் காட்டக் கூடும். சாதாரணமான கலவனுள்ள நாட்டுப் பருத்திக்குப் பதி லாய் கம்பெனிப் பருத்தியை விளைவிப்பதால் இவ்விதமான லாபம் அடையமுடியும்.

மணிலாக்கொட்டை வேர்க்கடலை, பயிர்மாற்றிச் சாகுபடி ஏன் செய்யவேண்டும்

சென்ற வருஷத்தில் மணிலாக்கொட்டை சாகுபடியின் விஸ்தீரணம் ஐரோப்பிய யுத்தத்தினால் சற்றுக் குறைந்திருந்த போதிலும் இவ்வருஷத்தில் அநேகமாய் ஜாஸ்தியிருக்குமென்பதில் சற்றும் சந்தேகமில்லை. அது எல்லாரும் ஒத்துக்கொள்ளவேண்டிய சங்கதி இப்பயிர் முன் சாகுபடி செய்யப்படாத அநேக ஜில்லாக்களில் அதிசீக்கிரத்தில் இப்போது பரவிக்கொண்டு வருகிறது. நூதனமாய் இச்சாகுபடியைக் கையாடியிருப்பவர்களுக்கு ஆச்சரியத்தை யுண்டுபண்ணும்படியான லாபத்தையும் பணவரும்படியும் இப்பயிர் கொடுத்திருக்கிறது. மற்ற பயிர்கள் லாபகரமாய் பணம் தராதென்று நினைக்கும் இடங்களில்கூட, இதுகாரணம்பற்றி இப்பயிர்செய்ய எத்தனித்துவிட்டதுடன் முன் தானியப்பயிர் செய்துகொண்டிருந்த சில பாகங்களில் தானியப்பயிர் செய்யாமல் விட்டுவிட்டு இப்பயிரையே சாகுபடிசெய்கிறார்கள். கரிசல் நிலங்களில் கூட சில இடங்களில் பருத்திபோன்ற கைத்தொழில் பயிர்கள் சாகுபடி செய்வதை விட்டுவிட்டு அதற்கு பதிலாக மணிலாக்கொட்டை பயிர்செய்துவருகிறார்கள். மற்ற பயிர்களிலிருந்து இப்பயிரில் கிடைக்குமளவு இலாபம் கிடைக்கிறதில்லையென்ற ஜாஸ்தியான ஆசையே இப்பேர்ப்பட்ட மாறுதல்களுக்கு முக்கிய காரணம். இம்மணிலாக்கொட்டை பயிர் ஆரம்பத்தில் நல்ல மகசூலும் பணவரும்படியும் கொடுப்பதால் இப்பயிரையே இடைவிடாமல் கிருஷிகர் ஒரேயிடத்தில் வருஷாவருஷம் பயிர்செய்துகொண்டிருக்கிறார்கள். சில இடங்களில் சேர்ந்தாப்போல் 4, 5 வருஷத்துக்கு மணிலாக்கொட்டை பயிர் செய்தபின் 1, 2 வருஷங்களுக்கு வேறு பயிரும் செய்துவரப்படுகிறது. ஜாஸ்தி விஸ்தீரணம் நிலம் வைத்துக்கொண்டிருக்கும் கிருஷிகர் இம்மணிலாக்கொட்டை பயிரையே ஒரேயிடத்தில் இடைவிடாமல் பயிர்செய்கிறதில்லை என்றாலும் கொஞ்சம் விஸ்தீர்ணம் வைத்துக்கொண்டிருக்கும் கிருஷிகர் பயிர் மாற்றாமல் இப்பயிரையே ஒரேயிடத்தில் சாகுபடி செய்துகொண்டிருக்கிறார்கள். பின்வரும் கேட்டை யோசித்துப் பாராமல் தற்காலத்தில் கிடைக்கும் இலாபத்தையே போதுமென்று கருதுகிற கிருஷிகர் வருஷாவருஷம் பயிர் மாற்றாமல் ஒரேயிடத்தில் மணிலாக்கொட்டை சாகுபடிசெய்வதினால் உண்டாகும் கெடுதிகளைக் குறித்து, சற்றும் யோசிக்கிறதேயில்லை. பயிர்மாற்றி சாகுபடி செய்யாமல்போனால் அப்பயிரிட்ட நிலத்தின் சத்து குறைந்து அதில் விளையும் பயிர் நாளுக்கு

நாள் க்ஷீணித்து மாசூலும் ஏற்கனவே குறைந்துபோகும். அப்பேர்ப்பட்ட சந்தர்ப்பத்தில் கிருஷிகர் சாதாரணமாய் மணிலாக்கொட்டை பயிரின்மேல் மனவருத்தங்கொண்டு, இந்த பயிர் நிலத்தை கெடுத்துவிட்டதாக நிந்தனை செய்கிறார்கள். இந்த நிந்தனைக்கு மணிலாக்கொட்டை பயிர் காரணமல்ல. இப்பயிரை இடைவிடாமல் ஓரேயிடத்தில் பயிர்செய்து நல்லலாபம் அடைந்துவிடலாம் என்று கிருஷிகர் எண்ணும் பண ஆவலே இந்த நிந்தனைக்கு காரணமாகும். இம்மணிலாக்கொட்டை மாசூலின் அளவு நாளுக்குநாள் க்ஷீணித்துக்கொண்டு வருகிறதென்பதற்கு இப்பயிரில் அங்கங்கே கிடைக்கும் மாசூல் ஒரே மாதிரியாயில்லாமல் மிக்க வித்தியாசமாயிருக்கிறதென்பதே போதுமான அத்தாட்சியாயிருக்கிறது. ஒரு இடத்தில் மணிலாக்கொட்டையை இடைவிடாமல் வருஷாவருஷம் பயிர்செய்துகொண்டுவந்தால், அந்த பயிருக்கு நோய்நொடிகளின் பாதையுண்டாக இடம் ஜாஸ்தியாயுண்டு ஆனால் இப்பயிர் நூதனமாய்ச் செய்யுமிடங்களில் இப்பயிருக்கு இருக்கும் நோய்நொடிகளின் பாதை மிகச் சொற்பம். ஒரே ஜாதிச் செடிகளை ஒரே நிலத்தில் அடிக்கடி பயிர்செய்துகொண்டுவந்தால் அந்நிலத்தில் ஒரு விதமான நோய்நொடி பலகிப் பெருகி உண்டாக ஏற்ற இடமாயிருக்கும். ஏனென்றால் அப்பேர்ப்பட்ட இடங்களில் அந்நோய் நொடிகளுக்கு உபகாரமாயிருக்கும். உணவுப் பொருள்கள் ஜாஸ்தி கிடைக்கக்கூடும். க்ஷீணித்துப்போன பருப்பிலிருந்து அவ்வளவு ஜாஸ்தியான எண்ணெய் கிடைக்கமாட்டாதாகையால் அப்பேர்ப்பட்ட கொட்டைகளுக்கு சரியான விலை கிடைக்கமாட்டாது. அடிக்கடி மணிலாக்கொட்டை பயிர்செய்து கேவலமாயிருக்கும் நிலங்களில் உண்டாகும் கொட்டை லேசாயும் கேவலமாயும் இருக்கும். அதற்கு சவளைக்கொட்டை என்று பெயர். இந்த சவளைக்கொட்டைகளை விதைத்தால் அதிலிருந்து உண்டாகும் பயிர் வீரியமாயிருக்கமாட்டாது. மேலும் விடாது மணிலாக்கொட்டை பயிர்செய்யும் நிலத்தில் ஜாஸ்திகளை யுண்டாக்கி அதனால் மாசூல் கம்மியுமாகும். இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங்களில் மணிலாக்கொட்டை பயிர் செய்வதை விட்டுவிட்டு முன்செய்த பயிர்களை கிருஷிகர் செய்யவேண்டியதாயிருக்கிறது. ஆகையால் மணிலாக்கொட்டை சாகுபடி செய்வதில் பயிர் மாற்றிச்சாகுபடி செய்யவேண்டிய விஷயத்தைக் குறித்து எல்லா கிருஷிகரும் கவனம் செலுத்தவேண்டும். மணிலாக்கொட்டையே இடைவிடாது பயிர் செய்யாமல் இடையில் வேறு பயிர் செய்யவேண்டுமென்பதற்கு இன்னொரு காரணமுண்டு. மணிலாக்கொட்டை பயிர் அனேகமாய்

ஜூலை மாதத்தில் விதைக்கப்பட்டு டிசம்பர் ஜனவரி மாதத்தில் அறுவடையாகும். சாதாரணமாய் கால மழைகள் சரியான காலத்தில் சரியானபடி பெய்தால் அனேகமாய் துவக்கி சரியான மாசூல் கிடைக்கும் மழை சரியானபடி பெய்யாவிடிலோ மாசூல் சரியாய் அகப்படமாட்டாது. ஆகையால் மணிலாக்கொட்டையை, கம்பு, தினை, ராகி முதலியவைகளைப்போன்ற தானியப் பயிர்களுடன் மாறிமாறி பயிர் செய்தால் கிருஷிகருக்கு ஒரு பயிர் மழையில்லாமல் கெட்டுவிட்டாலும் மற்றொரு பயிரிலிருந்தாவது மாசூல் கிடைக்க ஏதுவிருக்கும். தென்ஆற்காடு ஜில்லாவில் மணிலாக்கொட்டையை ஏதாவது ஒரு தானியப்பயிருடன் கலந்து விதைத்துப் பயிர் செய்யும் வழக்கமிருக்கிறது. ஆனால் அவ்வழக்கம் அநேகர் கைபாடுகிறதில்லை என்பதை பார்க்க பரிதாபமாயிருக்கிறது. 1910-வருஷத்து 10-வது நம்பர் துண்டு பத்திரிகையில் மணிலாக்கொட்டையுடன் ஒரு தானியப்பயிர் கலப்பதினால் அடையும் அனுகூலங்களை நன்றாய்க் குறிப்பிட்டு எழுதியிருக்கிறது. ஒரு நிலத்தில் ஒருவருஷம் மணிலாக்கொட்டையும், மறுவருஷத்தில் கம்பு, ராகிபோன்ற தானியப்பயிரும் பயிர்செய்தால், மணிலாக்கொட்டைக்கு பின்னால் மணிலாக்கொட்டையே பயிர்செய்வதில் கிடைக்கும் மாசூலைவிட ஜாஸ்தி மாசூல் கிடைக்கும் சொற்பநிலம் வைத்துக்கொண்டிருக்கிற கிருஷிகர் மணிலாக்கொட்டையை இறவைப்பயிராய் சாகுபடி செய்யும்பொழுது அதைவெட்டி எடுத்தவுடனே அதிலேயே மறுபடியும் மணிலாக்கொட்டையை மானவாரியாய் சாகுபடி செய்கிறார்கள். பாலூர் விவசாய பண்ணையில் 12-ம் நம்பர் கொல்லையில் ஒவ்வொரு வருஷமும் இறவைக்கொட்டைக்குப் பின்னால் மானவாரிக்கொட்டை பயிர்செய்யப்பட்டுவருகிறது 7½ வண்டி எருவும் ஒவ்வொரு பயிருக்கு முன்னும் போடப்பட்டுவருகிறது. 1908-09-ம் வருஷத்தில் மானவாரிக்கொட்டை 1,044 ராத்தல் மாசூல் கொடுத்தது. இந்த கொல்லை நாளாவர்த்தியில் இதேமாதிரி பயிர்செய்து கொண்டுவந்ததில் மாசூல் கம்மியாகி, 1913-14 வில் 463 ராத்தலுக்கு இறங்கிவிட்டது. இப்படி கம்மியாய் கிடைத்திருக்கும் மானவாரிக் கொட்டையின் மாசூல், மணிலாக்கொட்டையை இடைவிடாமல் ஒரேயிடத்தில் வருஷாவருஷம் பயிர் செய்வதனாலுண்டாகும் கேட்டை திருஷ்டாந்தமாய்க் காட்டுகிறது. இத்துடன் மணிலாக்கொட்டை மாசூலில், ராசியிலும் நாளுக்குநாள் க்ஷீணித்துக்கொண்டே வருகிறதென்ற லோகவதந்தியையும் நிரூபிக்கிறது. மேலும் தக்க ஆதாயம் கிடைக்கக்கூடிய வேறு தினுசு, பயிரை மணிலாக்கொட்டையுடன் மாறிமாறி பயிர்செய்ப

வேண்டிய அவசியத்தையும் ஏற்படுத்துகிறது. சாதாரணமாய் செப்டம்பர்மாதம் முதல் ஜனவரிமாதத்திற்கு மத்தியிலுள்ள மாதங்களில் மணிலாக்கொட்டையைப்போல் அவ்வளவு லாபம் தரும் பயிரை சாகுபடி செய்ய முடியாது. வெங்காயப்பயிரை அந்தமாதங்களில் விளைவித்தால் சுமாரான லாபத்தைகொடுக்கும். கம்போடியா பருத்தியும் தக்க மாசூல் கொடுத்திருக்கிறது. வேர்க்கடலையை பயிர்செய்யும் வட்டங்களில் ஒருவருஷத்திற்குள் ஒரு மணிலாக்கொட்டை பயிராவது அல்லது இரண்டு மணிலாக்கொட்டை பயிராவது செய்துகொண்டுவரும் காரணத்தினால் அந்நிலங்களில் மணிலாக்கொட்டை வீரியமாய் வளராமல் ஓர்வித நோய்கொண்டதுபோலாகிப் பயிர் நரைத்து, அதன் மாசூலும் நாளாவட்டத்தில் கம்மிப்படுகிறது. கம்போடியா பருத்தியை பயிர்செய்வதினால், பயிர்மாற்றி சாகுபடி செய்யுங்காலம் நீடிக்கின்றது; மணிலாக்கொட்டை பயிருக்கு பதிலாகவேறே இலாபகரமான பயிர்செய்யவும் கூடும். கம்போடியா பருத்தியை மணிலாக்கொட்டைக்குப் பின் பயிர் மாற்றி சாகுபடி செய்தால் அந்நிலத்தில் மறுபடி மணிலாக்கொட்டை பயிர்செய்யுமுன் கிடைக்கக்கூடிய காலத்தின் அளவு ஜாஸ்தியாகுமாதலாலும், மணிலாக்கொட்டையைப்போல் தக்க மாசூல் கிடைக்கக்கூடிய பயிராயுமிருக்கிறது. கம்போடியா பருத்தி பாலூர் சர்க்கார் விவசாயப் பண்ணையில் இலாபகரமாய் பயிர்செய்யப்பட்டிருக்கிறது. தென் ஆற்காடு ஜில்லாவில் மணல்சாரி நிலங்களில் சரியானபடி எருச் செய்தால் இப் பருத்தி பயிர்செய்ய ஏற்றதாயிருக்கும். செப்டம்பர்மாதம் ஆகரிலாவது அல்லது அக்டோபர்மாதம் முதலிலாவது இப்பயிர் விதைக்கலாம். சாதாரணமாய் இக்காலத்தில் கிடைக்கக்கூடிய மழையுடன் இரண்டு தரம் இப் பயிருக்குத் தண்ணீர் இறைக்க வேண்டியதாயிருக்கும். எருவு தண்ணீர் இறவையுடன் பட இச்சாகுபடி செய்யச் செல்லும் செலவு ஏகரா 1-க்கு ரூபா 50-க்கு மேல்படாது செலவுபோக அதாயம் ரூபா 150-க்கு கம்மிபடாது தற்காலத்தில் மணிலாக்கொட்டையிலிருந்து சராசரி ஏகரா 1-க்கு இதைவிட ஜாஸ்தி இலாபம் கிடைக்கிறதில்லை.

எட்டாவது பக்கம் தொடர்ச்சி.

ஒரு நடுகையும் ஏகரா ஒன்றுக்கு 500 பட்டணம்படிக்கு மேல்படாத மாசூல் கொடுக்கும் நிலங்களில் அரைச்சாணுக்கு ஒரு நடுகையும் போடுதல் ஒருவேளை சரியாகவிருக்கும். சாதாரணமாய் ஏகர் ஒன்றுக்கு 1500 பட்டணம்படி மாசூல் கொடுக்கும் கொழுத்த நிலங்களில், ஒரு நடுகைக்கும் மற்றொரு நடுகைக்கும் இரண்டு ஜாண் தூரமிருந்தால் நல்ல மாசூல் கொடுக்கலாம். ஆனால் நடுகை

செய்யாதவும் எப்பொழுதும் விதைப்பையே கையாடி வரும் மிக்க கேவலமான நிலங்களில் ஒற்றை நாற்று நடுதலால் ஜாஸ்தி மகசூல் கிடைக்கலாமென்று சொன்னபோதிலும் அப்படி நட்டதினால் கிடைக்கும் ஜாஸ்தி மகசூலைவிட ஒற்றை நாற்றாய் நெருக்கி நட செலவு ஜாஸ்தியாகவேயிருக்கும்.

ஒற்றை நெல் நாற்று நடுகைபோடும்பொழுது அடியில்கண்ட விஷயங்களைக் கவனிக்கவேண்டும்.

1. ஒரு ஏகர் நிலம் நடவேண்டியதற்காக நாற்றங்காலில் விதைக்கவேண்டிய விதைகள் பட்டணம்படி 10-க்கு அதிகப்படக் கூடாது. விதை நல்லதாயும் சரியானபடி காயப்போட்டு பத்திரப் படுத்தியதாயுமிருந்தால், ஏழு சென்டு நாற்றங்காலில் ஏழு பட்டணம்படி விதை நாற்றுப்பாவினால் ஒருஏகரா நிலத்தில் நடப்போதுமான நாற்றுகிடைக்கும். தஞ்சாவூர் ஜில்லாவில் அநேக கிருஷிகர் ஒரு ஏகரா நிலம் நட மூன்று பட்டணம்படி சிறுமணியாவது, சிகப்பு சம்பாவிதையாவது நாற்றுப் பாவுவதாகச் சொல்லுகிறார்கள்.

2. கூடுமானால் முந்திய வருஷத்தில் ஒற்றை நாற்றாய் நட்ட பயிரிலிருந்து விதை சேகரிக்கவேண்டும். சித்திபெற இப்படிச் செய்தல் அவசியமில்லையென்ற போதிலும், ஒருதரம் ஒற்றை முதலாய் பயிர் செய்துவிட்டால் அந்தப் பயிரிலிருந்து கணக்கு வேண்டிய விதை எப்போதும் பொறுக்கி சேகரித்து வைத்துக் கொள்ளக்கூடும்.

3. புழுதிக்காலில் பாவின நாற்று சேற்றுக்காலில் பாவிய நாற்றைவிடத் திடமாயிருக்கும்.

4. நாற்று முதிருமுன் பிடுங்கி நடவேண்டும்.

5. இப்படி நடவேண்டிய வயல்களை சமதளமாய் ஜாக்கிரதையுடன் பரம்படிக்கவேண்டும். நட்டபின் அதிகத்தண்ணீர் கட்டாமலும் பார்த்துவரவேண்டும்.

Printed at the Alexandra Press, Kumbakonam and Published by Mr. C. R. Lakshmivaraha Ayyangar, B. A. B. L., and Mr. R. Srinivasa Ayyangar, B. A. for The Agricultural Association, No. 5 Cutchery Road, Kumbakonam.